# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

நாள்: 24.11.2021

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**

**ஐயா, வணக்கம்**

**பொருள் : நிர்வாகம் - பணியாளர்களின் தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் - தீர்க்கப்பட கோருதல் - தொடர்பாக**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியாற்றும் ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் பல்வேறு கோரிக்கைகள் மீது தொழிற்சங்கங்கள் தங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு காணப்படவில்லை என்பது கவலை அளிக்கிறது.

1. மின்னகம் தொடர்பாக ஏற்கனவே தொழிற்சங்கங்கள் கூட்டாகவும் தனியாகவும் மின்வாரிய தலைவர் மற்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியோரிடம் ஆலோசனைகளை கொடுத்திருந்தோம். ஆனால் இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் ஊழியர்களும், பொறியாளர்களும் கடுமையான மன உளச்சலோடு பணியாற்றி வருகின்றனர்.
2. தளவாடப் பொருட்கள் பிரிவு அலுவலகத்தில் குறிப்பாக பியூஸ் ஒயர், காம்பவுண்ட் (Cable) ஜாயின்ட் கிட், ஏ.பி.சுவிட்ச், கேபிள் போன்றவை தட்டுப்பாடு உள்ளது. இதனால் பொருட்கள் இல்லாமலே பணியை செய்வதில் தேவையற்ற காலதாமதம் உருவாகிறது. இதனால் மின் நுகர்வோர் மத்தியில் வாரியத்திற்கு அவப்பெயர் உருவாகிறது.
3. மின்வாரிய ஆணை எண் 8 (கணக்குப்பிரிவு) நாள் 17.08.2021 மூலம் செயற்பொறியாளரிலிருந்து மண்டல தலைமைப் பொறியாளர் வரை ஏற்கனவே உள்ள Delegation Power-ல் அனுமதிக்கப்பட்ட தொகையை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் வாரிய பணிகள் கடுமையாக பாதித்துள்ளது. இது குறித்து கடந்த 24.08.2021 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடமும், மின்வாரியத் தலைவர் அவர்களிடமும் கடிதம் கொடுத்து பேசப்பட்டுள்ளது.
4. மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும், பொறியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள், அதாவது 22 மேற்பார்வை பொறியாளர் பதவிகள், 38 செயற்பொறியாளர் பதவிகள் 100-க்கும் மேற்பட்ட உதவி செயற்பொறியாளர் பதவிகள், கணக்கீட்டாய்வாளரிலிருந்து வருவாய் மேற்பார்வை



Scanned with CamSca

பதவி உயர்வுகள், நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர்(கணக்கு) மற்றும் (நிர்வாகம்) பதவியிலிருந்து உதவியாளர் பதவிகள், உதவியாளர் கணக்கிலிருந்து கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்வுகள் தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளமின் பொறியாளர் 2-ம் நிலை, பட்டயம் அல்லாத களப்பிரிவு பணியாளர்களிலிருந்து இளமின் பொறியாளர் 2-ம் நிலை, உள்முக தேர்வு மூலம் அனைத்து பதவி உயர்வுகள் மற்றும் நிர்வாகப்பிரிவில் பதவி உயர்வுகள் ஆகியவை பல மாதங்களாக வழங்கப்படாமல் இருப்பது பணியாளர்கள் மத்தியில் மனச்சுமையை அதிகரித்துள்ளது.

5. விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் வாரிய விதிமுறைகளின் படி நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சரியல்ல, வெளிப்படைத் தன்மையோடு உத்தரவுகள் வழங்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

6. வேலைபளு ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கும், புதியதாக உருவாக்கப்பட்ட துணை மின் நிலையங்களுக்கும், Redeployment செய்யப்பட்ட கட்டுமானம் உள்ளிட்ட இடங்களுக்கும் பதவிகள் அனுமதிட வேண்டும். வழுதூர் மற்றும் குத்தாலம் எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையங்களை அவுட்சோர்சிங் விடக்கூடாது.

7. மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். இதற்கான குழு அமைக்கப்பட்டும் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். எனவே ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை உடனடியாக துவங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் இக்கடித்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து தொழில் அமைதியையும் தொழில் உறவையும் மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

24/11/2021

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

For ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய இன்ஜினியர்ஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்



Scanned with CamSca